# ஜனவரி – 24 – புதன்

சலேஸ் நகர புனித பிரான்சிஸ்
உன் வழிமரபை என்றென்றும் நிலைக்கச் செய்வேன்.திபா. 89:4

---

## முதல் வாசகம் : 2 சாமுவேல் 7 : 4 – 17

அன்று இரவே ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்பட்டது. நீ சென்று, என் ஊழியன் தாவீதிடம் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் நான் தங்குவதற்காக எனக்கு ஒரு கோவில் கட்டப்போகிறாயா? இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து நான் அழைத்துவந்தது முதல் இந்நாள் வரை நான் ஒரு நிலையான இல்லத்தில் தங்கவில்லை மாறாக ஒரு நடமாடும் கூடாரமே எனக்குத் தங்குமிடமாய் இருந்தது. இஸ்ரயேல் அனைவரும் சென்ற இடமெல்லாம் நானும் உடன் சென்றேன். அப்பொழுது என் மக்கள் இஸ்ரயேலைப் பேணும்படி குலத் தலைவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன் அவர்களுள் எவரிடமாவது எனக்காக கேதுரு மரங்களால் ஒரு கோவில் கட்டாததேன்? என்று ஒரு வார்த்தை சொல்லியிருப்பேனா? எனது ஊழியன் தாவீதிடம் படைகளின் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் என் மக்கள் இஸ்ரயேலின் தலைவனாக விளங்க புல்வெளியில் ஆடுமேய்த்துக் கொண்டிருந்த உன்னை நான் அழைத்தேன். நீ சென்றவிடமெல்லாம் நான் உன்னோடு இருந்தேன் உன் கண்முன் உன் எதிரிகள் அனைவரையும் அழித்தேன் மேலும் உலகில் வாழும் பெரும் மனிதர் போல் நீ புகழுறச் செய்தேன். எனது மக்களாகிய இஸ்ரயேலுக்கு ஓர் இடத்தை அளிப்பேன். அவர்கள் அந்த இடத்திலேயே வாழ வைப்பேன். என் மக்களாகிய இஸ்ரயேல் மீது நீதித் தலைவர்களை ஏற்படுத்திய நாள்களாகிய தொடக்ககாலத்தில் தீயவர்களால் அவர்கள் ஒடுக்கப்பட்டது போல இனியும் அவர்கள் அலைக்கழிக்கப்பட மாட்டார்கள். அனைவரின் தொல்லைகளினின்றும் உனக்கு நான் ஓய்வு அளிப்பேன். மேலும் ஆண்டவர் தாமே உன் வீட்டைக் கட்டப்போவதாக அவர் உனக்கு அறிவிக்கிறார். உன் வாழ் நாள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும் போது, உனக்கு பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன். எனது பெயருக்காக கோவில் கட்டவிருப்பவன் அவனே. அவனது அரசை நான் என்றும் நிலைநிறுத்துவேன். நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். அவன் தவறுசெய்யும்போது மனித இயல்புக்கேற்ப அடித்து, மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன். உன் முன்பாக நான் சவுலை விலக்கியது போல, என் பேரன்பினின்று அவனை விலக்கமாட்டேன். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்! மேற்கூறிய வெளிப்பாட்டின் வார்த்தைகள் அனைத்தையும் நாத்தான் தாவீதுக்கு எடுத்துரைத்தார்.

**பதில்பாடல் :** எனது பேரன்பு என்றும் நிலைக்கச் செய்வேன்

## நற்செய்தி : மாற்கு 4 : 1 - 20

அக்காலத்தில் இயேசு மீண்டும் கடலோரத்தில் கற்பிக்கத் தொடங்கினார். மாபெரும் மக்கள் கூட்டம் அவரிடம் ஒன்றுகூடி வர, அவர் கடலில் நின்ற ஒரு படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் இருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றை அவர்களுக்குக் கற்பித்தார். அவர் அவர்களுக்குக் கற்பித்தது:. ”இதோ, கேளுங்கள், விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேர் இல்லாமையால் கருகிப் போயின. மற்றும் சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிடவே, அவை விளைச்சலைக் கொடுக்கவில்லை. ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து வளர்ந்து, சில முப்பது மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில நூறு மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்”. அவர் தனிமையான இடத்தில் இருந்தபோது அவரைச் சூழ்ந்து இருந்தவர்கள், பன்னிருவரோடு சேர்ந்து கொண்டு, உவமைகளைப்பற்றி அவரிடம் கேட்டார்கள். அதற்கு இயேசு அவர்களிடம், ”இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது புறம்பே இருக்கிறவர்களுக்கோ எல்லாம் உவமைகளாகவே இருக்கின்றன. எனவே அவர்கள் ”ஒருபோதும் மனம் மாறி மன்னிப்புப் பெறாதபடி கண்ணால் தொடர்ந்து பார்த்தும் கண்டுகொள்ளாமலும் காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்ளாமலும் இருப்பார்கள்” என்று கூறினார். மேலும் அவர் அவர்களை நோக்கி, ”இந்த உவமை உங்களுக்குப் புரியவில்லையா? பின்பு எப்படி மற்ற உவமைகளையெல்லாம் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்? விதைப்பவர் இறைவார்த்தையை விதைக்கிறார். வழியோரம் விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் வார்த்தையைக் கேட்பார்கள். ஆனால் அதைக் கேட்டவுடன் சாத்தான் வந்து அவர்களுள் விதைக்கப்பட்ட வார்த்தையை எடுத்துவிடுகிறான். பாறைப் பகுதியில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பவர்கள். இறைவார்த்தையின் பொருட்டு இன்னலே இடுக்கண்ணோ நேர்ந்த உடனே அவர்கள் தடுமாற்றம் அடைவார்கள். முட்செடிகளுக்கு இடையில் விதைக்கபட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள். இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் ஏனைய தீய ஆசைகளும் உட்புகுந்து அவ்வார்த்தையை நெருக்கி விடுவதால் பயன் அளிக்கமாட்டார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக் கொண்டு பயன் அளிப்பார்கள். இவர்களுள் சிலர் முப்பது மடங்காகவும் சிலர் அறுபது மடங்காகவும் சிலர் நூறு மடங்காகவும் பயன் அளிப்பர்” என்றார்.

**தியானம்:**“பலன் கொடுப்பீர் நல்ல பலன் கொடுப்பீர் பண்பட்ட நிலமாய் பலன் கொடுப்பீர் வழியோரமா? கற்பாறையா? முட்புதரா? நல்ல நிலமா?”இவ்வாறு பாடல் வரிகளில் பார்ப்பது போன்று நாங்கள் எவ்வகையான நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளாக இருக்கின்றோம் என்று சிந்திக்க இன்றைய தியான வாசகங்கள் எங்களை அழைத்து நிற்கின்றது. எங்களை நாங்களே நிந்தித்த பார்பபோமானால். எங்களில் சிலா் நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் போன்று வாழாமல், வழியோரம் விதைக்கப்பட்ட விதைகள் போன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள், இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு ஏற்று வாழ்வது ஆனால் பாவங்கள், பலவீனங்கள், காமவேட்கை, களியாட்டம் அவ்றினால் அலகைக்கு இடம் கொடுத்து விடுகிறார்கள், வேறு சிலரோ பாறைப் பகுதியில் விழுந்த விதைகள் போன்று சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கின்றாா்கள் ஆனால் வார்தையின் நிமித்தம் பலரால் வேறுபட்ட கருத்துக்கள் கூறும் பொழுது, இன்னல்கள் ஏற்படும் பொழுது தடுமாற்றமடைவார்கள் இறைவார்த்தையில் நிலைத்திருக்மாட்டார்கள். வேறு சிலா் உலக காரியங்களுக்கு அடிமைப்பட்வர்களாக பணம். பதவி, என்ற ஆசைகளுக்கு அடிமைப்பட்டு விடுபடமுடியாமல் வாழ்ந்து முட்செடியில் விதைகள் போன்று பயனளிக்காமல் போய்விடுகிறார்கள். அன்று நாங்களும் நல்ல நிலத்தில் வதைகளாக அல்லாமல் அவ்வாறான நிலங்களில் வழுந்த வதைகள் போன்று வாழ்ந்துகொணுருக்கின்றோம். நல்லநிலத்தில் விழுந்த விதைகளாக இருப்போரோரின் வாழ்க்கையோ மாறுபட்டதாக இருக்கும் அவர்களின் சொல், செயல் ஒவ்வொன்றும் இறைவனுக்குரியதாக இருக்கும். இவ்வாறு வாழ்வோரின் உள்ளத்தில்தான் இயேசு வந்து தங்குவாா். ஏனென்று சொன்னால் இன்பத்திலும், துன்பத்திலும் எவ்வேளையிலும் எங்கள் கூடவே அவர் இருக்கிறார். அதை உணா்ந்தவா்களாக அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட நாங்கள் எமது உள்ளத்தை துாய்மைப்படுத்துவோம், ஆண்டவராகிய இயேசு தாவீதிடம் நிரந்தரமான ஆலயம் கட்ட நாத்தானிடம் அறிவிக்கும்படி கூறுகின்றார், எனவே இன்றைய நாளில் அவரது அலயத்தில் நாம் குடிகொள்ள எமது உள்ளத்தை துாய்மைப்படுத்தி நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் போன்று பலன் கொடுத்து வினண்ணரசுக்கு செல்ல எங்களைத் தயார்படுத்துவோம்.